பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை : 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்பி.

மலர் : 15] சென்னை: மார்கழி 14 (29—12—67) வெள்ளி ★ வெளியூர்: மார்கழி 15 (30—12—67) சனி [இதழ் : 164

இருமொழி திட்டமே சிக்கலைத் தீர்க்கும்

மும்மொழித் திட்டத்தால் ஒற்றுமை சீர்குலையும்

தமிழக அமைச்சர் மாதவன் கண்டனமும் எச்சரிக்கையும்

சென்னை, டிச. 29—

"ஒற்றுமையாக வாழ்வது என்பதற்கும்—ஒரேமாதிரியாக வாழ்வது என்பதற்கும் வேறுபாடு உண்டு. 'ஒற்றுமை வேண்டுமா? ஒருமுகப்பாடு வேண்டுமா? எது வேண்டும்?' என்பதை முதலில் முடிவு செய்யவேண்டும்.

"தமிழ்நாட்டை ஆளும் எங்களைப் பொறுத்தமட்டில், நாங்கள், நாட்டு ஒற்றுமைக்காகவே பாடுபட விரும்புகிறோம்.

"பிரிவினையைப் பற்றி இங்கு தற்போது பேச்சே எழவில்லை; 'வடக்கு—தெற்கு' என்று பிரித்துப் பேசும்படியான ஒரு நிர்ப்பந்த சூழ்நிலைக்கு மற்றவர்கள் எங்களைக் கொண்டுவராமல் இருந்தால், அதுவே போதும்.

"எனவே, நாட்டின் ஒற்றுமை காக்கப்பட வேண்டுமானால், தமிழ்நாட்டில் உள்ள எங்களுக்கு ஆங்கிலம் தொடர்ந்து நீடித்தாக வேண்டும்"

என்று, அமைச்சர் செ. மாதவன், 42-வது அனைத்திந்தியக் கல்வி மாநாட்டையொட்டி நடைபெற்ற கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் விளக்கிக் கூறினார். மேலும் அவர், மொழிப் பிரச்சினை பற்றிக் கருத்தறிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"மும்மொழித் திட்டத்தினால் பயன் இல்லை; வட்டார மொழி — ஆங்கிலம் ஆகிய இரண்டையும் மாணவர்கள் கற்றால் போதும்; இத்தகைய இரு மொழிக் கொள்கையைக் கடைபிடித்தால், மொழிப் பிரச்சினையே தீர்ந்துவிடும்.

"இரு மொழிக் கொள்கை திட்டவட்டமாகப் பிரகடனப் படுத்தப்படுமானால், 'மாணவர்கள் கிளர்ச்சி' என்பது தமிழ் நாட்டில் தொடராது என்று மாணவ சமுதாயம் சார்பில் உறுதி கூறவும் முடியும்.

மாணவர்களிடையே கட்டுப்பாடின்மை காணப்படுவதாகப் பொதுவாகப் புகார் சொல்லப்படுகிறது.

மாணவர்கள் மீது குற்றஞ் சுமத்துவானேன்? கல்வியாளர்களும், கல்விக் கொள்கைகளை வகுக்கும் அரசியல் தலைவர்களுமே அதற்குப் பொறுப்பாளிகளாவார்கள்.

மாணவர்கள் மனத்தினுள்ளிருக்கும் கொந்தளிப்பைக் கண்டுகொண்டு, அவர்களை வேதனைப்படுத்தும் மொழிப் பிரச்சினையைத் தீர்க்காத வரையில், இதற்கெல்லாம் இறுதி முடிவு கட்டுவதென்பது இயலாத காரியமாகும்.

"நான் பள்ளிக்கூடத்தில் படித்தபோது, மூன்று மொழிகளைக் சட்டாயமாகக் கற்க வேண்டியிருந்தது; ஆனால் எனக்கு எந்த ஒரு தனிப் புலமையை அதனால் பெற முடியவில்லை; எனவே, 'ஏன் மூன்று மொழிகளைக் கற்க வேண்டும்' என மாணவர்கள் கேட்பதில் அர்த்தமில்லாமலில்லை."

அல்வாக்காரர்கள் படையெடுப்பு!

தலைநகர் காவல்துறையினருக்கு புதிய தலைவலி!

ஆச்ரா, மதுரா, கான்பூர் மற்றும் இராஜஸ்தானத்து நகரங்களிலிருந்து வந்த—அல்வா போன்ற இனிப்புப் பண்டங்களைத் தயாரிப்பவர்கள்—புதுடில்லியில் மறியல் நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.

சர்க்கரை மீதிருந்த கட்டுப்பாடு அரைகுறையாகத் தளர்த்தப்பட்டிருப்பதை எதிர்த்தும், பல்வேறு மாநிலங்களிலும் வெவ்வேறுவிதமாக அமுலில் இருந்துவரும் உணவுப் பங்கீடு சம்பந்தமான சட்ட திட்டங்களில் மாற்றங்கள் செய்ய வேண்டும் எனக் கோரியும் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

அண்மையில் மக்களவைக்கு எதிரில் மறியல் நடத்திய அல்வாக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

அனைத்திந்திய 'அல்வாவாலா'க்கள் சங்கத்தாரால் இந்த மறியல் நடத்தப்படுகிறது.

அல்வாக்காரர்கள் மென்மேலும் தலைநகருக்கு வந்து சேர்ந்தவாறு இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஷேக் அப்துல்லா முயலுவார்!

வெகு விரைவில் விடுதலை செய்யப்படவிருக்கும் ஷேக் அப்துல்லா காஷ்மீரிலுள்ள சிறுபான்மையினரான இந்துக்களுக்கும்—பெரும்பான்மையினரான முஸ்லிம்களுக்குமிடையே வளர்ந்துள்ள பிணக்குகளை அகற்றுவதில் முழுமூச்சுடன் ஈடுபடக் கூடுமாம்!

தலைநகரில் குறள் மணம்!

சென்னை, டிச. 29—

சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, நகரின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள முக்கிய வீதிகளிலும், சாலைகள் சந்திப்புகளிலும் வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன; அவற்றில், திருவள்ளுவர் உருவமும், தமிழிலும் ஆங்கிலத்திலும் திருக்குறட் பாக்களும் எழுதப்பட்டுள்ளன.

குடியரசு நாள் விருந்தாளிகளாக கோசிஜின் — டிட்டோ!

அடுத்த ஆண்டில் இந்தியக் குடியரசு நாள் கொண்டாட்டத்தின்போது, விருந்தினர் வரிசையில் முக்கியப் பார்வையாளர்களாக இரஷ்யத் தலைமையமைச்சர் கோசிஜின், யுகோஸ்லேவிய அதிபர் டிட்டோ ஆகிய இருவரும் இருப்பார்கள்!

சனவரி 29-ந் தேதி இந்தியாவுக்கு வரவிருந்த இரஷ்யத் தலைமையமைச்சர், குடியரசு நாளில் கலந்துகொள்வதற்காகவே தனது பயணத்தை, மூன்று நாட்களுக்கு முன்னதாகவே தொடங்குகிறார்!

புதுடில்லியில் நடக்க இருக்கும் வேறு ஒரு அனைத்து நாடுகளின் மாநாட்டுக்கு வரும் 2,500 வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், இந்த ஆண்டின் குடியரசு நாள் வைபவங்களைக் கண்டு களிக்கும் 'சிறப்பு விருந்தாளி'களாக இருப்பர்!

பாதுகாப்பு அமைச்சகம், இதற்கான ஏற்பாடுகளை இப்போதே சிறப்பான முறையில் கவனித்துவருகிறது!

ஜனசங்க மாநாட்டுக்கு 'ஜனரஞ்சக'க் கூட்டமாம்!

அமைப்பாளர்களே திகைத்து நிற்கும் அளவுக்கு, கள்ளிக்கோட்டையில் நடக்கும் 14-வது ஜனசங்க மாநாட்டுக்குப் பிரதிநிதிகள், 'வெள்ள'மெனத் திரண்டு வருவதாகப் பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

'சுமார் 5,000 பிரதிநிதிகள் வரலாம்' என எதிர்பார்த்த மாநாட்டு நிர்வாகிகள், கிட்டத்தட்ட 10,000 பேர் வருவதைக் கண்டு பதைபதைத்து நிற்கிறார்களாம்!

நாகப்பூரிலிருந்து வந்துள்ள நாற்பது சமையற்காரர்கள், நாளொன்றுக்கு 40,000 சப்பாத்திகள் வீதம் பிரதிநிதிகளுக்கென உற்பத்தி செய்கிறார்கள்!

'அதிகம் பேர்' வந்துவிட்டதால், (அதாவது 10,000) பந்தலில் இடம் இல்லாத நிலை வந்துவிட்டிருக்கிறதாம்!

பிரதிநிதிகளுக்கான 'பேட்ஜ்'கள் கூட, பற்றாக்குறையாகப் போய்விட்டிருக்கிறதாம்!

சட்டத்தின்முன் அனைவரும் சமமே!

சோதனைச் சாவடியில் அமைச்சரின் காரும் தப்பவில்லை!

உணவுப் பொருள்களை, அனுமதியின்றி ஓரிடம்விட்டு மற்றோர் இடத்துக்கு எடுத்துச் செல்வதனைத் தடுப்பதற்காகச் சாலைகளில் அமைக்கப்பட்டிருக்கும் சோதனைச் சாவடி (செக் போஸ்ட்') பொறுப்பாளர்களின் கடமை உணர்வினுக்கு 'அமைச்சரின் காரும் தப்ப முடியவில்லை' என்ற சம்பவம் ஒன்றினை, விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், கோவையில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் பாராட்டுடன் தெரிவித்திருக்கிறார்.

'தான் சோதனை இடுவது அமைச்சரின் கார்' என்று சொல்லப்பட்டும்கூட, சாவடிப் பொறுப்பாளர்,

"அப்படித்தான் எல்லோரும் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்"

என்ற பதிலைத் தந்துவிட்டு, சோதனையினைத் தொடர்ந்து நடத்தி—திருப்தியடைந்த பின்னரே—அமைச்சரின் காரை மேலே செல்ல அனுமதித்திருக்கிறார்!

காதில் விழுந்தது!

"சுப்பிரமணியம் 'பிழைத்து'க்கொள்வார்!"

'என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?"

"தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர் பதவிக்கு வந்த பின், முதன்முறையாக நடந்த வரவேற்புக் கூட்டத்தில் நேற்று அவர் பேசியிருப்பதனை வைத்துத்தான் சொல்லுகிறேன்!"

"அப்படியொன்றும் புதிதாக எதையும் சொல்லிவிடவில்லையே அவர்!

"புதிதாக இருக்கிறதோ, இல்லையோ—புதிராக இருக்கிறது அவர் பேச்சு; 'மொழிப் பிரச்சினையில், பெரிய தலைவர் காமராசர், இராஜாஜியுடன் சேர்ந்துவிட்டார்' என்றுகூட வடக்கே உள்ளவர்கள் பயப்படும்படி நிலைமை இருக்க, நேற்று முன்தினம் தலைவராக வந்திருக்கும் சுப்பிரமணியம், ஆட்சிமொழிச் சட்டம் பற்றிப் பேசியிருப்பது புதிராகவும், காமராசருக்குப் போட்டியாகவும் இருப்பது உனக்குப் புரியவில்லையா?"

"இராஜாஜியைத் தாக்கிப் பேசியிருக்கிறார்! கழகத்தைப் பற்றித் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்! மற்றபடி, ஆட்சி மொழிச் சட்டம் பற்றி, காமராசரை எதிர்த்து ஒன்றும் கூறவில்லையே!"

"இல்லை; நீதான் பேச்சினைச் சரியாகப் படிக்கவில்லை! கலப்படம் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கும் ஆட்சிமொழிச் சட்டம், 'அதிருப்தியைத் தருகிறது' என்று சில வார்த்தைகளில் சொன்னாலும், சரியாகச் சொல்லியிருக்கிறார் காமராசர்! ஆனால் சுப்பிரமணியமோ, 'நிறைவேற்றப்பட்டிருக்கும் சட்டம், இந்தி பேசுவோர்—பேசாதோருக்கிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள 'யோக்கியமான ஒப்பந்தம்' என்று வர்ணித்திருக்கிறார்—இதற்கு என்ன அர்த்தம்? மொழிச் சட்டத்தைப் பற்றிக் காமராசர் வெளியிட்டிருக்கும் கருத்துக்கும்—சுப்பிரமணியம் சொல்லியிருக்கும் எண்ணத்துக்கும் நூற்றுக்கு நூறு வேறுபாடு இருக்கிறதே!"

"இதனால்தான், 'சுப்பிரமணியம் பிழைத்துக்கொள்வார்' என்கிறீர்களா?"

"ஆமாம்; ஆட்சிமொழிச் சட்டம் பற்றிப் பெங்களூரிலும், அடுத்து புதுடில்லியிலும் காமராசர், துணிச்சலுடன் சொல்லியிருக்கும் ஒரு சில வார்த்தைகள், அங்கே உள்ள மேலிடம் முதல் கீழிடம்வரையில் பெரும் கடுகடுப்பை ஏற்படுத்தியிருக்கிறது! உத்தரப் பிரதேசத்துக் காங்கிரசுக்காரர் ஒருவர், காமராசரை இதுபற்றிக் காரசாரமாகக் கண்டித்துப் பேசினாரே — கவனிக்கவில்லையா?"

"சரியாய்ச் சொன்னாய்; காரசாரமாக மட்டும் பேசவில்லையே அவர்? 'காமராசரைக் கட்சியிலிருந்து விலக்கவேண்டும்' என்றுகூடப் பேசினார்; பத்திரிகைகள்தான் அதை ஏனோ பெரிதுபடுத்தவில்லை!"

"சரி! அதை மனதில் வைத்துக்கொண்டு இப்

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 14 (29—12—67) வெள்ளி

படை வருகிறதாம் படை!

இராணுவப் படையை ஏவி, தமிழகத்தில் இந்தி ஆதிக்கத்தை நிலைநாட்டப்போவதாக சேத் கோவிந்த தாஸ் என்ற இந்தி வெறியர் முன்னர் அறிவித்திருந்தார். இது பற்றிக் கண்டனம் கிளம்பியதும், 'அப்படிச் சொல்லவில்லை—இந்தி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகச் சொல்லவில்லை' என்றெல்லாம் சில நாளைக்குப் பின்னர் அவர் மழுப்பவும் செய்தார்.

சேத் கோவிந்த தாஸ் அவர்களின் அச்சுறுத்தல் எப்படியாவது இருந்துபோகட்டும்; மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான—காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த இந்தி வெறியர், 'இருபத்தைந்து ரூபாய் கொடுத்தால் தமிழர்கள் இந்தியைப் படித்துக் கொள்வர்' எனக் கூறியதன் மூலம், தமிழ் மக்களை இழிவுபடுத்தினார். நாடாளுமன்றத்திலேயே அவர் அப்படிக் கூறி, தமிழ் மக்களின் தன்மான உணர்ச்சிக்கு அறைகூவல் விடுத்தார்.

இப்பொழுது மற்றொரு முயற்சியை இந்தி வெறியர்கள் மேற்கொள்ள இருப்பதாகச் செய்தித்தாள்களில் செய்தி வந்திருக்கிறது; அதாவது, சேத் கோவிந்த தாஸ் வெளிப்படையாகக் குறிப்பிட்ட இராணுவப் படையைத் தமிழகத்திற்கு அனுப்புவதற்குப் பதிலாக, 1000 தொண்டர்களைத் தமிழகத்துக்கு அனுப்ப விக்ரம் சவர்க்கார் என்ற இந்தி வெறியர் திட்டமிட்டிருக்கின்றாராம்!

விக்ரம் சவர்க்கார் என்ற இந்தி வெறியர் வகுத்திருக்கின்ற இத்தொண்டர் படையெடுப்பு, சேத் கோவிந்த தாஸ் குறிப்பிட்ட இராணுவப் படையெடுப்புக்கான ஒத்திகை போலும்!

'தமிழகத்தில், இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற கிளர்ச்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது' என்ற குறிக்கோளைக் கொண்டதாம், இத்தொண்டர் படை!

ஆங்கில ஒழிப்புச் சங்கத்தின் ஆதரவில் இந்த இந்திப் படை. தமிழகத்துக்கு வரப்போகிறதாம்!

மாராட்டிர மாநிலத்தைச் சேர்ந்த—நாகபுரியைப் பாசறையாகக் கொண்ட இந்த இந்திப் படைக்கு, இந்தி பேசும் மாநிலங்களிலிருந்து 'படை வீரர்கள்' சேர்க்கப்படுவராம்!

அதற்காக, இந்தி மாநிலங்களிலுள்ள இந்தி வெறியர்களுடன் தொடர்பு கொள்ளும் முயற்சியில் விக்ரம் சவர்க்கார் ஈடுபட்டிருக்கிறாராம்.

இப்படை, வருகின்ற சனவரித் திங்கள் 26-ந் தேதி நாகபுரியை விட்டு தமிழகத்தின் தலைநகரை நோக்கிப் புறப்படவிருக்கிறதாம்!

ஆங்கில மொழியைத் தொலைத்துத் தலைமுழுகிவிட்டு, அதற்குப் பதிலாக இந்தி மொழியை ஏற்றுக்கொள்ளத் தமிழ் மக்களின் ஆதரவைத் திரட்டுவதுதான் இப்படைக்குள்ள பணியாம்!

விக்ரம் சவர்க்காரின் இந்த இந்திப் படை முயற்சியில், சேத் கோவிந்த தாஸ் அவர்களுக்கு நேரடித் தொடர்பு இருந்தாலும் இருக்கலாம்—இல்லாமலும் இருக்கலாம்; ஆனால், இப்படை முயற்சி தமது உள்ளக்கிடக்கையை எதிரொலிப்பதாக இருக்கின்ற காரணத்தால், இதற்குக் கோவிந்த தாஸ் அவர்களின் வாழ்த்தும், பேராதரவும், தீவிர ஒத்துழைப்பும் இருக்கத்தான் செய்யும்.

இந்த இந்திப் படை தமிழகத்துக்கு வந்தால், அது காணப் போகின்ற காட்சியும், சந்திக்கக்கூடிய எதிர்ப்பும், பெறக்கூடிய பரிவும் எத்தகையதாக இருந்திடக்கூடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இந்தித் திணிப்பைத் தமிழக மக்கள் ஏன் எதிர்க்கின்றார்கள்—அதற்குரிய அடிப்படைக் காரணம் என்ன—என்பதை, இப்படையின் தளபதியோ அல்லது சேத் கோவிந்த தாஸ் போன்ற இந்தி வெறியர்களோ இதுவரையில் தெரிந்துகொண்டிருப்பதாகக் காணோம்! 'ஆங்கில மொழியின் மீதுள்ள மிகுதியான பற்றுதல் காரணமாகத்தான் தமிழ் மக்கள், இந்தித் திணிப்பை எதிர்க்கின்றனர்' என்ற அவர்கள் கருத்து, நூற்றுக்கு நூறு தவறானதாகும்.

இந்தி மொழி ஆதிக்கத்தால் தங்கள் தாய்மொழியான தமிழ் சீரழிந்துபோகும் என்ற உண்மையைத் தமிழக மக்கள் உணர்ந்துள்ள காரணத்தால்தான், இந்தி மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டிருப்பதை முழுமூச்சாக எதிர்த்துவருகின்றனர்.

இந்தி ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால், தங்களுடைய நலன்கள் பாழ்பட்டுப்போவதுடன், 'சொந்த நாட்டிலேயே இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டுவிடுவோமோ' என்ற அச்சத்தின் காரணமாகவும், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கின்றனர்—தமிழக மக்கள்!

ஆங்கில மொழியின் பயன்படுகின்ற தன்மையையும், உலகத் தொடர்புக்காக ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டியது கட்டாயத்திலும் கட்டாயமாகிறது என்ற நிலையையும் தமிழக மக்கள் உணர்ந்திருக்கின்ற காரணத்தாலும், 'ஆங்கில மொழியும் ஆட்சிமொழியாக நீடித்து இருந்துவரவேண்டும்' எனத் தமிழக மக்கள் விரும்புகின்றனர்; அதற்காகப் பெருமுயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

கண்ணை விலையாகக் கொடுத்து சித்திரத்தை வாங்குவதை, தமிழக மக்கள் விரும்பவில்லை என்பதுடன், அப்போக்கை எதிர்க்கவும் செய்கின்றனர்.

அரசியலில் தங்களுடைய ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொள்வதற்கும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், இந்தி மொழி தங்களுக்கு ஏற்றதோர் கருவூலமாகவும், அருந்துணையாகவும் இருக்கின்ற ஒரே காரணத்துக்காகத்தான், ஆங்கிலத்தை எதிர்த்து ஒழித்துவிட்டு, அதனிடத்தில் தங்கள் தாய்மொழியாம் இந்தியைத் திணித்திருப்பதை இந்தி வெறியர்கள் வாழ்த்துகின்றனர்—வரவேற்கின்றனர்—பூரித்துக் கிடக்கின்றனர்!

இந்தி வெறியர்களின் உள்ளத்தில் உறைந்துகிடக்கின்ற இவ்வரசியல் பேராசையை, தமிழக மக்கள் தெள்ளத் தெளியத் தெரிந்துகொண்டுவிட்டனர். இப்பேராசை வெற்றி பெற, தமிழக மக்கள் எப்பொழுதும் இடம் கொடுத்துவிடப்போவதில்லை.

தமிழ் உள்ளவரையில்—'தமிழகம்' என்ற புனித நிலப்பரப்பு உள்ளவரையில்—'தமிழன்' என்ற ஒருவன் உயிருடன் உள்ளவரையில்—இந்தி ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். தமிழக மக்களின் சவத்தின் மீதாவது, இந்தி மொழியால் 'உலா' வர முடியுமா என்பது சந்தேகம். ஆதிக்க இந்தி நுழைகிறது என்றால், தமிழக மக்களின் சவங்களும்கூட உயிர்பெற்று எழுந்து அந்த ஆதிக்கத்தை எதிர்க்கும் என்பது உறுதியிலும் உறுதி!

இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதில் தமிழக மக்களுக்கு உள்ள இந்த உள்ள உரத்தைப் புரிந்துகொள்ளாமலும், புரிந்து கொண்டாலும் புரிந்துகொள்ளாதவர்கள்போல் நடித்து, தமிழகத்தின்மீது படையெடுத்து வரவிருக்கின்ற 'ஆயிரம் தொண்டர் படை', தமிழக மக்கள் தலைநிமிர்ந்து நோக்கினாலே போதும்—அந்த நோக்கிலிருந்து கிளம்பும் தீப்பொறியில், சருகுபோல் தீய்ந்து நீறாகிவிடும்!

அமைதியாக உள்ள தமிழகத்தில், குழப்பத்தை விதைக்க வருகின்ற இந்தி வெறியர்களின் சோற்றுப் படையை எப்படிச் சந்திப்பது—எப்படித் தகர்ப்பது என்ற வித்தை, தமிழக மக்களுக்குத் தெரியும்.

படை வருகிறதாம் படை! இந்தி ஆதிக்கப் படை வரட்டும்—தமிழ் மக்கள் தரவிருக்கின்ற விலை மதிக்க முடியாத நற்பரிசைப் பெற்றுக்கொண்டு போகட்டும்!

—கா. க.

இந்தி பேசாத மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி

ஆட்சிமொழி மசோதாவுக்கு தமிழகக் கம்யூனிஸ்டுக் கட்சி கண்டனம்

அண்ணா முயற்சியை வரவேற்று எம். கல்யாணசுந்தரம் அறிக்கை

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலச் செயற்குழுச் சார்பில் எம். கல்யாணசுந்தரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

"இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையில், இந்தியுடன் ஆங்கிலமும் மத்திய அரசின் துணை ஆட்சிமொழியாக நீடிக்கும்" என்று நேரு கொடுத்திருந்த வாக்குறுதியைச் சட்டமாக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வந்தது; நேருவின் வாக்குறுதியை நிறைவேற்றுவதாகக் கூறி, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் ஆட்சிமொழி மசோதாவும், அத்துடன் நிறைவேற்றியுள்ள தீர்மானமும், இந்தி பேசாத மக்களுக்கு அநீதி இழைத்துள்ளது!

நேருவின் வாக்குறுதி கைவிடப்பட்டுவிட்டது; மொழிப் பிரச்சினை தீருவதற்குப் பதில், மேலும் உணர்ச்சிகள் வளருவதற்கு இடமளித்துள்ளதுடன், நாட்டின் ஒற்றுமை உணர்வுக்கும் அபாயம் வளர்ந்துள்ளது.

தமிழகத்தில், இந்திக்கு எதிராக ஆத்திரம் வளர்ந்துள்ளது. மாணவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இந்தி பேசாத மக்களுக்கு ஆத்திரம் ஏற்படுவது இயல்பே. இந்தி பேசாத மக்களின் ஆத்திரம் தணிய வேண்டுமானால், ஆட்சிமொழி மசோதாவையும்—தீர்மானத்தையும் மத்திய அரசு ஒத்திவைக்க வேண்டும்; இது ஒன்றே நாட்டில் அமைதி நிலவ அவசியமாகும்.

எனவே, குடியரசுத் தலைவர், இந்த மசோதாவுக்கு ஒப்புதல் அளிப்பதை நிறுத்திவைக்க வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலச் செயற்குழு கோருகிறது.

நேருவின் உறுதியை முழுமையாக உத்தரவாதம் செய்ய சட்டம் இயற்ற வேண்டிய அடிப்படைகளை, அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி தக்க முடிவுகள் செய்ய மத்திய அரசு ஆவனசெய்ய வேண்டும்.

தமிழகத்திலுள்ள கட்சிகள் ஒன்று கூடிப் பொதுத் திட்டம் வகுத்து நேருவின் உறுதிமொழியை உத்தரவாதம் செய்ய இயக்கம் நடத்துவது அவசியம்.

தமிழக முதல்வர் திரு. அண்ணாதுரை, இந்தி பேசாத மாநில முதலமைச்சர்களைக் கலந்து, நேருவின் வாக்குறுதியைச் சட்ட உத்தரவாதமாக்க எடுக்க இருக்கும் முன்முயற்சி வரவேற்கத் தக்கதாகும்."

தவறான அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை

மொழி மசோதா குறித்து கேரள முதலமைச்சர்

புதுடில்லி, டிச. 27—

"தவறான முடிவின் அடிப்படையில் மொழிப் பிரச்சினை சமாளிக்கப்பட்டிருக்கிறது"

என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு இங்கு தெரிவித்தார்.

"தற்போது இணைப்பு மொழிப் பிரச்சினையே நம் முன்னே நிறுத்தப்பட்டிருக்கிறது; இது, குதிரைக்கு முன்னே வண்டியைப் பூட்டுவதைப் போன்றதாகும்" என்றார் அவர்.

செய்தியாளரிடம் அவர் மேலும் கூறியதாவது:—

"மொழி மசோதா இரு சாராரிடையேயும் சமரசத்துக்குப் பதில் சச்சரவையே உண்டாக்கி விட்டது.

இந்தி வெறியர்கள் உள்ளபடியே சமரசத்தை விரும்பவில்லை; உடனடியாக ஆங்கிலம் இருக்குமிடத்தில் இந்தியைப் புகுத்தவே விரும்புகின்றனர்.

வட்டார மொழியை வளர்ச்சியுறச் செய்வதே முக்கியப் பிரச்சினையாகும்; அப்படிச் செய்வதற்கு, வட்டார மொழியை மாநில ஆட்சிமொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஆக்க வேண்டும்.

மாநில அளவில் ஆங்கிலம் இருக்கும் இடத்தில் வட்டார மொழிகளைப் பயன்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்ட பிறகுதான், இணைப்பு மொழியைப் பற்றிப் பேசவேண்டும்; இதற்கிடையில், ஆங்கிலமும் இந்தியும் ஆட்சிமொழிகளாக நீடிக்கவேண்டும்.

இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை காலவரையறையின்றி ஆங்கிலம் துணைத் தொடர்பு மொழியாக நீடிக்குமானால், இந்தியை ஆட்சிமொழியாக ஏற்பதற்கு எங்கள் கட்சி எப்போதும் தயாராகவேயுள்ளது; ஆனால் அதற்கு இந்திக்காரர்கள் தயாராயில்லை.

தற்போதைய சூழ்நிலையில், ஓர் அனைத்து நாட்டு மொழி நீடிப்பது தவிர்க்க முடியாததாகும். அனைத்து நாட்டு மொழியும், நமது நாட்டின் தொடர்பு மொழியாக வரும் கட்டமும் வரலாம்.

தமிழ்நாட்டில் இராஜாஜி, அண்ணா, காமராசர் ஆகியோர் மொழிப் பிரச்சினையில் மெல்ல-மெல்ல ஒன்றுபட்டு வருகிறார்கள்; இது எதில் கொண்டு போய்விடும் என்பது தெரியாது!

என்னைப் பொறுத்தவரையில், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாவை ஆதரிக்கக்கூடிய நிலையில் இல்லை; ஏனெனில், இந்த மசோதா நிறைவேறியதும், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் மூண்டிருக்கின்றன!

எனவே, ஆளுங்கட்சியினர், தேசீயப் பிரச்சினைகளை மறு ஆய்வு செய்ய இதுவே நேரம்! எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு வழியைக் காண வேண்டியது இன்றியமையாப் பணியாகும்!"

இந்தி பேசாதவர்கட்கு அநீதி இழைப்பதா?

ஆட்சிமொழிப் பிரச்சினையை மறு ஆய்வு செய்க!

பெங்களூர், டிச. 29—

"ஆட்சிமொழி மசோதாவையொட்டி தீர்மானத்திற்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டதன்மூலம், இந்தி பேசாத மாநிலங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டது என்பதே இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கருத்து"

என்று, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையக உறுப்பினரான திரு. என். கே. கிருஷ்ணன் இங்கு தெரிவித்தார்.

"முதலில் கொண்டுவரப்பட்ட மசோதா திருப்தியூட்டுவதாகவும் காங்கிரசல்லாத முதலமைச்சர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது; ஆனால், காங்கிரசுக் கட்சிக்குள் கோஷ்டிப் பூசல்கள்—பிளவுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன், இந்தி வெறியர்களின் வற்புறுத்தலுக்குப் பணிந்து காங்கிரசுத் தலைமை, இவ்விதத் திருத்தத்துக்கு வழி செய்துவிட்டது"

என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மொழி சம்பந்தமாக எல்லா விவகாரங்களையும் முழு அளவில் மீண்டும் பரிசீலிக்கவேண்டும் என்றும், நாட்டு ஒற்றுமையைக் காக்க எல்லாவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவேண்டும் என்றும் கம்யூனிஸ்டுக் கட்சி விரும்புவதாக அவர் கூறினார்.

வி. வி. கிரியின் இடித்துரை

திருப்பதி, டிச. 27—

"இந்தியை உடனடியாக இணைப்பு மொழியாகத் திணிக்காமலிருந்தால் அதற்கு எதிர்ப்பு இருக்காது.

"மேலும், அனைத்துலக மொழியாகப் பயன்படக்கூடிய ஆங்கிலத்தின்மீது ஆத்திரம் கொள்வதில் அர்த்தமில்லை.

"எனவே, மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்த நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம்"

என்று இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

டில்லி அமைச்சர்களின் குழப்பம்—சி. சுப்பிரமணியம் கூறுகிறார்

சென்னை, டிச. 27—

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் திரு. சி. சுப்பிரமணியம், தமது கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் மொழிப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டதாவது:—

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசு ஏட்டின் விஷமத்தனம்

கழகச் சட்டமன்ற உறுப்பினர் மறுப்பு

வலங்கைமான் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் ந. சோமசுந்தரம் அறிவிப்பதாவது:—

எனது தொகுதியில் வெள்ளம்—உடைப்பு ஏற்பட்டபோது நான் ஊரில் இல்லை என்றும், 'பார்க்கவில்லை' என்றும் காங்கிரசுக் கட்சியின் நாளிதழான ஒன்று, 'கழக எம்.எல்.ஏ.-யைக் காணோம்' என்ற தலைப்புடன் உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளது. இது முற்றிலும் தவருன செய்தியாகும்.

நான், கடந்த 11—12—67 முதல் கீழ்க்கண்டவாறு எனது தொகுதியில் வெள்ளத் தடுப்பு நிவாரண வேலையில் அதிகாரிகளுடன் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன்.

11—12—67 காலை 10-மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து, வெள்ள நிவாரண நிதி பற்றி ஆலோசிக்கப்பட்டது. பின்பு 11-மணியளவில் மாவட்டப் பொது நல அதிகாரியைச் சந்தித்து மேற்கண்ட விஷயம்பற்றி ஆலோசனை செய்யப்பட்டது.

பிற்பகல் 3 மணிக்கு மன்னார்குடி கோட்டாட்சித் தலைவர், நீடாமங்கலம் ஆணையர், துணை தாசில்தார் ஆகியவர்களுடன் வெண்ணாற்றில்—பண்ணிமங்கலத்தில் ஏற்பட்ட உடைப்பைப் பார்வையிட்டோம். பின்பு குருவாடி, சித்தமல்லி, வெள்ளங்குழி, நகர் ஆகிய கிராம மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறப்பட்டது.

12—12—67-ல் மோட்டார் சைக்கிளில் மசிமாலை, ரெகுநாதபுரம், கொட்டப்படுகை, கிராம மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டது.

பின், மசிமாலை உடைப்பு அடைக்கும் வேலையைப் பார்த்து அங்கிருந்து விசேட எஞ்சினீயரைச் சந்தித்து மேற்படி வேலையைத் துரிதமாக முடித்துவிட வேண்டிக்கொண்டு, அம்மாப்பேட்டை துணைத் தாலுகா சப்ளை அதிகாரியைப் பார்த்து நியாய விலைக்கு அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பின் களஞ்சேரி ஊராட்சித் தலைவர்—கிராம சேவக் ஆகியோருடன் பள்ளியூர், நெய்க்குன்னம், களஞ்சேரி, இரும்புதலை முதலிய கிராமங்களுக்குச் சென்று கஞ்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மாலை 4-மணிக்கு பாபநாசம் தாசில்தாரைச் சந்தித்து நிவாரண வேலைகள் சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டது.

மாலை 5-மணிக்கு திருவையாற்றுக்குடி ஊராட்சித் தலைவர் (காங்கிரசு) அவர்களுடன் மட்டையந்திடல் கொயிலாம் பூண்டி கிராம மக்களை சந்தித்து ஆறுதல் கூறப்பட்டது.

6-மணிக்கு கோவிலூரில் தங்கியிருந்து நெல்லித்தோப்பு கிராம மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண வேலை மேற்கொள்ளப்பட்டது.

இரவு 8-30 மணிக்கு அம்மாப்பேட்டை ஆணையரைச் சந்தித்து மறுதினம் செய்யவேண்டிய நிவாரண வேலைகள் சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டது.

13—12—67-ல் வெண்ணாற்று உடைப்பு அடைக்கும் வேலைகளைப் பார்வையிட்டு பின்பு, தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்தில் இருந்த அமைச்சர் செ. மாதவன் அவர்களை, தொகுதியின் வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட அழைக்கப்பட்டது காலதாமதத்தால் நேரில் பார்வையிட இயலாமல், தொகுதி நிலவரங்களை இரவு 9-மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில்—அமைச்சரிடம், சேத விவரங்களைக் கூறி, தகுந்த நிவாரணமளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

14—12—67 காலை கழக நண்பர்களுடன் சைக்கிளிலும் நடந்தும் குருவாடி, எருமைப்படுகை கிராமங்களுக்குச் சென்று அரிசிக்கு ஏற்பாடு செய்து, அவ்வூர் ஊராட்சித் தலைவர் (காங்கிரசு) அவர்களையும் பார்த்து விவரம் அறியப்பட்டது.

11-மணிக்கு வலங்கைமான் ஊராட்சி ஒன்றிப்பு ஆணையர் அலுவலக ஊழியர்களுடன் தேவாமங்கலம், நிமமேலக்குடி, தென்குவளைவெளி கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறப்பட்டது.

மாலை 4 மணியளவில் வலங்கைமான் துணைத் தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர் முதலியோருடன் ஆலங்குடி, நார்த்தாங்குடி, நரிக்குடி, வேப்பத்தாங்குடி, கோட்டையூர் முதலிய கிராமங்களுக்குச் சென்று பார்வையிடப்பட்டது.

உண்மை இவ்வாறு இருக்க, கழகத்தின் செல்வாக்கைக் கண்டு பொருமையுற்ற அந்த ஏடு—கழகச் செல்வாக்கைக் குறைக்க எண்ணி — எனது பணியையும் குறைக்க வீண் பழியைச் சுமத்தியிருக்கிறது. இந்த ஏட்டிற்கு என் வன்மையான கண்டனத்தை—என் தொகுதி மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத் திட்டச் செலவில் டெல்லியின் வெட்டு

ரூ. 135 கோடிக்குப் பதில் ரூ. 65 கோடி !

புதுடில்லி, டிச. 27—1968—69-ஆம் ஆண்டுக்கான தமிழகத் திட்டங்களுக்கு ரூ 65 கோடி மட்டுமே ஒதுக்குவதென்று திட்டக் குழு முடிவு செய்துவிட்டது.

நடப்பு ஆண்டுக்கு ரூ. 85 கோடி ஒதுக்கப்பட்டது என்பது நினைவு கூரத்தக்கது.

தமிழக அரசு, தனது திட்டங்களுக்காக ரூ. 135 கோடி ஒதுக்கவேண்டும் என்று கோரி அதற்கான மதிப்பீடுகளையும் அனுப்பிவைத்திருந்தது; இதை ரூ. 65 கோடியாக வெட்டிவிட்டது—திட்டக் குழு!

"ரூ. 65 கோடிக்கான திட்டங்களிலும், மத்திய அரசின் பங்குத் தொகை ரூ. 42 கோடியாகத்தான் இருக்கும்"

என்று, திட்டக் குழுவைச் சந்தித்த பின், தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

"ரூ. 135 கோடிக் திட்டத்தை ரூ. 83 கோடியளவுக்குத் தமிழக அரசு குறைத்துக்கொண்டிருந்தும்கூட, அதனை டெல்லி ஏற்காமல் ரூ. 65 கோடியாகக் குறைத்துவிட்டது" என்று அண்ணா அவர்கள் கூறினார்கள்.

சென்னையில் மலேசியத் தோழர்கள்

என். வி. நடராசன் வரவேற்பு

சனவரி 3-ம் நாள் சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளுவதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிப் பார்க்கவும் 32 பேர்களைக் கொண்ட மலேசியத் திராவிடர் கழகத் தோழர்கள், 23—12—67 அன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

கழகக் குழுவினர், தற்போது சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் விடுதியில் தங்கியுள்ளனர்.

தி. மு. கழக அமைப்புச் செயலாளரும், மேலவை உறுப்பினருமான திரு. என். வி. நடராசன் அவர்களும், சென்னை டாக்சி டிரைவர்கள் சங்கப் பொதுச்செயலாளர் இராமலிங்கம் அவர்களும் நேரில் சென்று மலாயா கழகத் தலைவரும், குழுத் தலைவருமான கே. ஆர். இராமசாமி அவர்களுக்கு மாலையணிவித்து குழுவினரை அன்போடு வரவேற்ருர்கள்.

குழுவினர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் செய்வது சம்பந்தமாக, 'சுற்றுலா' நிகழ்ச்சிகளை திரு. என். வி. நடராசன் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

ஸன்காஸ்ட்

சிறந்த மோட்டார் உறுப்புகள்

கிளட்ச் ஹவுஸிங், பிரேக் ட்ரம்ஸ், கிங்பின்ஸ்



உறுதியும் உழைப்பும் மிக்க மோட்டார் உறுப்புகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அதனை பூர்த்திசெய்ய, சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட் ஸ்தாபனத்தார் மதுரையில் உள்ள தங்கள் நவீன தொழிற்சாலையில் ஸன்காஸ்ட் கிளட்ச் ஹவுஸிங்ஸ், பிரேக் ட்ரம்ஸ், கிங் பின்ஸ் முதலியவற்றைத் தயாரிக்கின்றனர்.

மிக உயர்ந்த சாமான்களைக் கொண்டு, மோட்டார்த் துறையில் பல்லாண்டுகள் அனுபவமுள்ள தொழிலாளர்கள், திறமையான மேற்பார்வையாளர்களின் கீழ் ஸன்காஸ்ட் மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கின்றனர்.

SUNKAST

சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட்
B, சூப்பர் 1 & 2 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், மதுரை 7
(ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

TVS

tvs-s-4392

அமெரிக்கத் தூதரகத்தின் நிதி நிலை !

ரூ. 100 கோடிக்கு மேல் கையிருப்பு

புதுடில்லி, டிச. 29—இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம், ரூ 100 கோடிக்கும் அதிகமான தொகையைத் தனது சொந்தச் செலவுகளுக்காக ஒதுக்கி வைத்துள்ளது எனத் தெரியவருகிறது.

கடந்த செப்டம்பர் 30-ம் நாள் அமெரிக்கத் தூதரகத்தின் வசமிருந்த தொகை ரூ. 452 கோடியாகும்; இதில் ரூ. 211 கோடி இந்தியாவுக்குக் கடனாகவும், ரூ. 41 கோடி மானியமாகவும், ரூ. 56 கோடி இந்திய-அமெரிக்கக் கூட்டுறவுகளில் நடைபெற்றுவரும் தொழில்களுக்கு உதவி நிதியாகவும் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரூ. 44 கோடியை அமெரிக்கத் தூதரகம் தனது சொந்தச் செலவுகளுக்காக ஒதுக்கிக் கொண்டுள்ளது.

இந்தியாவில் உள்ள அமெரிக்க நிலையங்களின் மாதச் செலவுகள் சுமார் ரூ. 3 கோடியாகும்.

1956 முதல் 1967 செப்டம்பர் இறுதிவரை அமெரிக்கத் தூதரகம் தனக்காகச் செலவழித்துள்ள தொகை ரூ. 140 கோடியாகும்.

தமிழ் எழுத்தாளர் சங்கம்

புதிய தலைவர் தேர்வு

சென்னை, டிச. 26—தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 1968-ம் ஆண்டுக்கான தலைவர் தேர்தல், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது; திரு. கோ. சிவபாதசுந்தரம் 138 வாக்குகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; இவருடன் போட்டியிட்ட திரு வேம்புவுக்கு 67 வாக்குகள் கிடைத்தன.

காங்கிரசாரின் வெறிச்செயல்!

கழகத் துணை மன்றத்துக்குத் தீ

"22—12—67 மாலை 7-மணியளவில் சென்னை 80-வது வட்டம் நடுக்குப்பத்தில் உள்ள தி மு.க. துணை அமைப்பான கே. ஏ. மதியழகன் மன்றத்தை, காங்கிரசுக்காரர்கள் தீயிட்டுக் கொளுத்திவிட்டனர்; இதுபற்றிப் போலீசில் புகார் செய்திருக்கிறேன்"

என்று, வட்டச் செயலாளர் எஸ். ஆனந்தன் அறிவிக்கிருர்.

தமிழ் நாட்டுக் காங்கிரசாருக்கு

ஆதித்தனர் அறிவுரை

கடலூர் முதுநகர் வில்லார்யன் பாளையத்தில் கருணாநிதி பூங்காவைத் திறந்துவைத்துப் பேசுகையில், தமிழகச் சட்டமன்ற அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் காமராசரும், பக்தவத்சலமும் போராடவேண்டும். இந்தி எழுத்துக்களைத் தார் கொண்டு அழிக்கவேண்டும்; 'முதலமைச்சர் பதவியில் இருந்தவர்கள் தார் கொண்டு இந்தியை அழிப்பதா' என்று கேட்கலாம்; பொறுப்பான பதவியில் இருக்கும் நான், தார் சட்டியைத் தூக்கிவருகிறேன்.

"தமிழகக் காங்கிரசார் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கவில்லை என்ருல் அடுத்த தேர்தலில் எதிர்க் கட்சியாகக்கூட வரமுடியாது போய்விடும்."

மத்திய அரசு நிறுவனத்தின் கிளை

சென்னையில் நிறுவ அண்ணா முயற்சி

புதுடில்லி, டிச. 27—பாரத் எலக்ட்ரானிக் நிறுவனத்தின் கிளை ஒன்றை சென்னையில் ஏற்படுத்துவதற்கான முயற்சியில் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் தீவிரமாக முனைந்துள்ளார்கள்.

இந்தக் கிளையை நிறுவுவதற்கு ஆவடிக்கு அருகில் 200 ஏக்கர் நிலத்தை ஒதுக்க வாய்ப்புள்ளதா என்று மத்திய அரசு அண்மையில் கேட்டிருந்தது.

இது தொழிலாளர்கட்கு வேலை கிடைக்கக்கூடிய ஏற்பாடாகையால், இதில், அண்ணா அவர்கள் தீவிரக் கவனம் செலுத்தி வருகிருர்கள்.

இன்று பாதுகாப்புத்துறை அமைச்சர் சர்தார் சுவரண் சிங்கை அண்ணா அவர்கள் கண்டு பேசினர்; 'தேவையான நிலத்தை ஒதுக்க இயலும்' என்பதையும் தெரிவித்தார்.

இதற்கிடையே மகாராட்டிர மாநில அரசும், தனது மாநிலத்தில் இந்தக் கிளையை அமைக்குமாறு வற்புறுத்தி வருகிறதாம்.

சென்னை--கொண்டியம்பதி அண்ணா படிப்பகம்

சென்னை—கொண்டியம்பதி அண்ணா படிப்பக நிர்வாகிகள் தேர்வு 3—12—67 அன்று பேசின் பிரிட்ஜ் தொகுதி துணைச்செயலாளர் இளங்கோ தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்:—

அவைத் தலைவர்: என். சீத்தாபதி; செயலாளர்: கே. கிருட்டினன்; துணைச்செயலாளர்: ந. செயராமன்; பொருளாளர்: திருமதி சி. துரைக்கண்ணம்மாள்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் எழுவர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது சுப்பிரமணியம் பேசியிருப்பதனையும் நினைத்துப் பார்! சுப்பிரமணியம், உண்மையில் கழகத்தையும் இராஜாஜியையும் மட்டும் தாக்கிப் பேசவில்லை; கட்சி விவகாரங்களில், காமராசரின் அரசியல் வாழ்க்கைக்கான கல்லறை, ஏற்கனவே உருவாக்கப்பட்டுவிட்டது; அதற்கான கடைசிக் கல்லைத் தேடிக்கொண்டிருந்தார்; அது இப்போது அவருக்கு, 'மொழிப் பிரச்சினை' என்ற உருவத்தில் கிடைத்திருக்கிறது! சுப்பிரமணியம், ஆட்சிமொழிச் சட்டத்தை வரவேற்றுப் பேசியிருப்பது ஏற்கனவே அதனைக் கண்டித்துப் பேசியிருக்கும் காமராசருக்கு—கட்சி மட்டத்தில்—பெரிய பாதகத்தினைத்தான் கொடுக்கும்!

"அது சரி; காமராசரை அப்புறப்படுத்துவதென்றால் வேறெந்தப் பிரச்சினையும் கிடைக்கவில்லையா? 'நாங்களெல்லாம் தமிழர்கள்' என்று சொல்லிக்கொள்ள வேண்டிய சுப்பிரமணியம், 'நான் ஒரு காங்கிரசுக்காரன்' என்று மட்டுமே சொல்லிக்கொள்ள விரும்புகிறார். அப்படியே இருந்தாலும், சுப்பிரமணியம், தமிழ் நாட்டுக் காங்கிரசுக்குத்தானே தலைவர்? அனைத்திந்தியாவுக்கும் தலைவராக இருக்கும் காமராசரே துணிந்து, 'சட்டம் கலப்படம் செய்யப்பட்டது சரியல்ல; அச்சத்தைத் தருகிறது' என்று சொல்லியிருக்கும்போது, இவர் மட்டும் ஏன் வலியவந்து வரவேற்றுப் பேசியிருக்கிறார்?"

"அங்கேதான் தவறிவிட்டார்—அமைச்சராக மட்டுமே இருந்து பழக்கப்பட்டிருக்கும் சுப்பிரமணியம்! தொகுதியில், தாம் தோற்க நேர்ந்ததற்குக் காரணம், இன்னும் அவருக்குச் சரியாகப் புரியவில்லை! அல்லது, புரிந்துகொண்டதை மதிக்க மறுக்கிறார்!"

"'மதித்தால் மட்டும் என்ன இலாபம் இனி கிடைக்கப் போகிறது? மக்கள்தான் கைவிட்டுவிட்டார்களே' என்ற எண்ணமாகக்கூட இருக்கும்!"

"ஓகோ! 'என்னைப் பழிவாங்கிய மக்கள், எனது கட்சியையும் பழிவாங்கட்டும்' என்ற திட்டமோ என்னவோ!"

—எஸ். ஆர்.

திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண குடில்

ஆண்டு விழா

திருப்பராய்த்துறை இராமகிருஷ்ணகுடில் ஆண்டு விழா; 31—12—67 காலையில்; அறிஞர் அண்ணா, அமைச்சர் முத்துசாமி, சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார், திருவாளர்கள் ஜி. டி. நாயுடு, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., கிருபானந்தவாரியார், ஆர். எஸ். மலையப்பன், எஸ். எம். டயஸ், என். அரிபாஸ்கர், நீதிபதி எஸ். மகாராசன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்; விவேகானந்தர் சிலை திறந்துவைக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-1 [illegible]

டில்லி அமைச்சர்களின்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"மொழிப் பிரச்சினையில் மக்கள் மட்டுமல்ல—மத்திய அமைச்சர்கள்கூட மிகுந்த குழப்ப நிலையிலேயேயுள்ளனர்.

'மத்திய கல்வியமைச்சர் திரு. திரிகுண சென்னும், மத்திய துணைக் கல்வியமைச்சர் திரு. ஷேர் சிங்கும் ஒரே நாளில் இரு வேறு கருத்துக்களை அறிவித்துள்ளனர்.

"எனவே, மக்களுக்குச் சரியான வழிகாட்டத் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி கடமைப்பட்டுள்ளது; அதற்கான நடவடிக்கைகளைக் கட்சி மேற்கொள்ள வேண்டும்."

ஆந்திராவில் இந்தி எதிர்ப்பு

மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

ஆந்திராவின் பல்வேறு பகுதிகளிலும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தொடர்ந்து நடந்துவருகின்றன.

காக்கிநாடாவிலும், சாமல்கோட்டிலும், தலைமை அமைச்சர் இந்திரா காந்தியின் கொடும்பாவி கொளுத்தப்பட்டிருக்கிறது.

காக்கிநாடா கல்லூரி மாணவர்கள் இந்தி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர். கடைகள், திரைப்படக் கொட்டகைகள் எல்லாம் மூடப்பட்டிருந்தன.

குண்டூர் மாவட்டம் பாபட்லாவில் மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று இரயில் வண்டிகளின்மீது இந்தி எதிர்ப்புச் சுவரொட்டிகளை ஒட்டினர்.

இராஜமந்திரியில் மாணவர்கள் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர்.

அரசினர் கலைக் கல்லூரியில் நடைபெறவிருந்த தேர்வுகள் தள்ளிவைக்கப்பட்டு, கல்லூரி மூடப்பட்டது.

இந்தித் திரைப்படக் காட்சிகள் நிறுத்தப்பட்டன.

சுவர்களிலும் சாலைகளிலும் இந்தி எதிர்ப்பு வாசகங்கள் எழுதப்பட்டன.

சென்னை 23-வது வட்ட

சீரணி உறுப்பினர்கட்கு:

சீரணி அதிகாரி திரு. பரமசாமி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சென்னை 23-வது வட்டச் சீரணி உறுப்பினர்கள் அனைவரும், 31—12—67 மாலை 3 மணிக்குள் தங்களின் சீரணி உடையுடன் தீவுத் திடலுக்கு (ஐலண்டு கிரவுண்டு) வருமாறு, வட்டச் சீரணித் தலைவர் ஆர். அரங்கநாதன் கேட்டுக்கொள்கிறார்.

போலீசார் விளையாட்டுப்போட்டி

மாநிலப் போலீசாரின் விளையாட்டுப் போட்டிகள், 30—12—67 மாலை 4-மணிக்கு சென்னை இராசரத்தினம் விளையாட்டரங்கில் நடைபெறும்; முதலமைச்சர் **அண்ணா** அவர்கள் தலைமை வகிப்பார்கள்; திருமதி இராணி-**அண்ணா** அவர்கள் பரிசுகள் வழங்குவார்கள்.

அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு!

ஆஸ்திரேலியத் தலைமையமைச்சர் ஹெரால்டு ஹோல்டு மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கச் சென்ற அமெரிக்க அதிபர் ஜான்சன், உடன் அழைத்துச் சென்ற நபர்களின் எண்ணிக்கை 300!

அவர்களில் அரசாங்க உதவியாளர்கள் போக, எஞ்சியவர்கள் செய்தியாளர்கள்!

நான்கு ஜெட் விமானங்களில் பயணம் சென்ற அந்த ஜான்சன் குழு, ஆஸ்திரேலியத் தலைமையமைச்சரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கச் சென்ற தூரம் 10,200 மைல்கள்!

நடக்க இருப்பவை

30--12--67

சிவகாசி

அண்ணா மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு மணிக்கட்டி ஊரணித் திடலில்; தலைவர்: அ. கருக்குவேல்ராசன்; பேசுவோர்: கே. ஆர். பி. மணிமொழியன், ஏ. துரைக்கண்ணன், வே. கருணாகரன், வெ வேலாயுதன், மு. பழனிச்சாமி.

31--12--67

மதுரை

மாவட்ட தி. மு. க. சார்பில் தென் சென்னை வெற்றி வீரர் மாறனுக்குப் பாராட்டு; மாலை 7-மணிக்கு தமுக்கம் திடலில்; தலைவர்: எஸ். முத்து எம்.எல்.சி.; பேசுவோர்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., ப. உ. சண்முகம், எஸ். எஸ். தென்னரசு, கு. திருப்பதி பி.ஏ. பி.எல்., மற்றும் சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

சுத்துக்கேணி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பிள்ளையார்கோயில் எதிரில்; தலைவர்: கோ. தனுசு; பேசுவோர்: நன்னிலம் நடராசன், எம். ஏ. சண்முகம், சு. ம. சுப்புராயன், கே. ஆர். சபாபதி, க. இராமசாமி, மு. பாலகிருட்டினன்.

சென்னை

சிம்சன் கூட்டுக் கம்பெனி தி. மு. க. தொழிலாளர்கள் சார்பில் கருத்துரை மன்றத் திறப்பு விழாவும், மேயர்—துணை மேயர்—சட்டமன்ற உறுப்பினர் வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோருக்குப் பாராட்டும்; மாலை 6-மணிக்கு சிந்தாதிரிப்பேட்டை சிங்கண்ண செட்டித் தெருவில்; தலைவர்: டி. பிரதாப் சிங்; பேசுவோர்: க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., என். வி. நடராசன் எம்.எல்.சி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.

சேலம்

8-வது வட்ட தி. மு. க. சார்பில் சங்கரி வெற்றி விழா; மாலை 6-30 மணிக்கு சுந்தரம் செட்டித் தெருவில்; தலைவர்: த. சுந்தரம்; பேசுவோர்: க. அன்பரசு, க. இராசாராம் பி.ஏ., எம்.பி., ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., கே. செயராமன் பி ஏ., எம்.எல்.ஏ., எஸ். மெய்யப்பன் எம்.சி., சிற்றுளி சுப்பிரமணியம், ச. திரு. அழகரசன், பொன்னிமுதல்வன், ஆ. சின்னையன், தண்டபாணி.

குழுக் கூட்டங்கள்

செங்கற்பட்டு வட்டம்

"செங்கற்பட்டு வட்ட தி. மு. க. குழுக் கூட்டம், செங்கற்பட்டு சீனிவாச திருமண மண்டபத்தில் 31—12—67 பிற்பகல் 2-மணியளவில் மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ. தலைமையிலும் — செங்கற்பட்டு தொகுதி, திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், செங்கற்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்களும், வட்டப் பிரதிநிதிகளும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன்" என்று வட்டச் செயலாளர் செ. எ. பலராமன் அறிவிக்கிறார்.

சென்னை 95-வது வட்டம்

சென்னை 95-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் 31—12—67 இரவு 9-மணியளவில் பகுதிச் செயலாளர் தலைமையில்—கழகப் பணிமனையில் நடைபெறும்; பொது உறுப்பினர்கள் இதையே அழைப்பாக ஏற்று தவறாது வருகை தருமாறு துணைச் செயலாளர் ஆ. சி. மணிமாறன் கேட்டுக்கொள்கிறார்.

பாலர் அரங்கம்

1968 ஜனவரி 1-ந் தேதி முதல் திரைப் படங்களுக்கான நுழைவுக் கட்டணம் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டிருக்கிறது:—

குழந்தைகளுக்கு 20 காசுகள்
பெரியவர்களுக்கு 40 காசுகள்

திங்கள் முதல் வியாழன் வரை
டாகுமெண்டரி திரைப்படங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறுகளில்
சிறுவர்களுக்கான திரைப்படங்கள்

வாரந்தோறும் செய்திப் படங்களை இங்கு காணத் தவறாதீர்கள்

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானம், சென்னை-3
தொலைபேசி: 38481

30--12--67 சனி மாலை 6-30 மணிக்கு
மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல்த்துறை அமைச்சர்
திருமதி து. சத்தியவாணிமுத்து
அவர்கள் தலைமையில்
ரேக்ளா பந்தயங்கள் நடைபெறும்

மாலை 6-30 மணிக்கு திறந்தவெளிக் கலையரங்கில்
'சாயி பைன் ஆர்ட்ஸ்' அளிக்கும் 'காகித ஓடம்' (By மெலட்டூர் விஸ்வநாத்)
தமிழ் நாடகம் நடைபெறும்

டிக்கெட்டுகள்: ரூ. 2; ரூ. 1; 50 காசுகள்

சிறப்புக் கூட்டங்கள்

திருச்சி

நகர தி. மு. க. நிதிக்காக 31-12-67 காலை 9-மணிக்கு தேவர் மன்றத்தில்; தலைவர்; எம். எஸ். மணி எம்.எல்.ஏ.; பேசுவோர்: அறிஞர் அண்ணா, அன்பில் தர்மலிங்கம், து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., எஸ். ஏ. ஜி. ராபி, அ. நடராசன், மற்றும் பலர். (மணி–சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சியும் நடைபெறும்); நன்கொடை: ரூ 10, 5, 3, 2.

மதுரை

நகர தி.மு.க. சார்பில், மறைந்த கழகத் தோழர் செல்லையா அவர்களின் குடும்ப நிதிக்காக; 31-12-67 மாலை 4-மணிக்கு தமுக்கம் கலையரங்கில்; தலைவர்: கு. திருப்பதி பி.ஏ.பி.எல்.; பேசுவோர்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி., எஸ். முத்து எம்.எல்.சி., சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., மற்றும் சட்டமன்ற–நாடாளுமன்ற உறுப்பினர்கள்; நன்கொடை: ரூ. 5; 2; பெண்களுக்கு ரூ. 1.

மதுரை கழகத் தோழர்களுக்கு:

"தென் சென்னையில் வெற்றிவாகைசூடிய முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி. அவர்களுக்கு 31—12—67 காலை 7 மணிக்கு மதுரை புகைவண்டி நிலையத்தில், மதுரை மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் தலைமையில், மதுரை மாவட்ட—நகர்—வட்ட தி. மு. கழகங்களின் சார்பில் மாபெரும் வரவேற்பு தரப்படும்; கழகத் தோழர்கள் அனைவரும் கழகக் கொடிகளுடன் 31-12-67 காலை 7 மணிக்கு புகை வண்டி நிலையத்திற்கு வருகைதர வேண்டுகிறேன்" என்று, நகரச் செயலாளர் கு. திருப்பதி கேட்டுக்கொள்கிறார்.

மதுரையில் எம்.ஜி.ஆர்.

நிகழ்ச்சிகள்

31—12—67 பிற்பகல் 3 மணி: சிறப்புக்கூட்டம்—தமுக்கம் கலை அரங்கம்; மாலை 6 மணி: மதுரை மாவட்ட ஆசிரியர்கள் சிறப்புக் கூட்டம்—காந்தி மியூசியம் கலை அரங்கம்; இரவு 7 மணி: முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி. அவர்களுக்குப் பாராட்டுப் பொதுக்கூட்டம்—தமுக்கம் மைதானம்; 10-30 மணி: 'கண்ணீரும் கதை சொல்லும்' நாடகத் தலைமை—தமுக்கம் கலை அரங்கம்.

கோவில்பட்டி சில்லறை வியாபாரிகள் சங்க ஆண்டு விழா

கோவில்பட்டி வெற்றிலை பாக்கு சில்லறை—பலசரக்கு வியாபாரிகள் சங்க 15-ம் ஆண்டு விழா, 31—12—67 மாலை 4 மணிக்கு கோவில்மேடு காந்தி மைதானத்தில் நடைபெறும்; தலைவர்: எஸ். சுப்பையா; வரவேற்புரை: பொ. தமிழரசன்; பேசுவோர்: பெரியார் ஈ.வெ.ரா., என். வி. நடராசன் எம்.எல்.சி., பி. எஸ். சின்னதுரை, ஈ. வே. அ. வள்ளிமுத்து, எம். ஆர். சனார்த்தனம், எஸ். கே. டி. சௌந்தரபாண்டியன், எஸ். பாலவிநாயகம், எஸ். அழகிரிசாமி எம்.எல்.ஏ., வே. சௌந்தரபாண்டியன், எஸ். வி. கருப்பையா தாஸ் மற்றும் பலர்.

தமிழ் வட்ட ஆண்டு விழா

தமிழ் வட்டத்தின் முதலாம் ஆண்டு விழா, 30—12—67 மாலை 5 மணிக்கு மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் நடைபெறும்; அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், மத்திய துணையமைச்சர் திரு. பி. எஸ். மூர்த்தி, டாக்டர் சி. இலக்குவனார், திருவாளர்கள் ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., பி. ஜி. கருத்திருமன் எம்.எல்.ஏ., மே. வீ. வேணுகோபாலர், கொத்தமங்கலம் சுப்பு, ரா. ஐயாசாமி, ந. சஞ்சீவி ஆகியோர் கலந்துகொள்வர்.